# <u>இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 3 தரம்  I இன் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2018(II)2023</u>

**மேற்படிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் சகல உத்தியோகத்தர்களுக்கும்,**

இலக்கம் 2,331 மற்றும் 2023.05.04 ஆந் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள மேற்படி வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கு உரித்தான அறிவித்தலின் படி அப்பரீட்சையினை 2023.06.11 ஆந் திகதி நடாத்த இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் தற்சமயம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

02. அப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான தகுதியைப் பெறுவது சம்பந்தமாக பின்வரும் விடங்களின் பால் தங்களது கவனத்தை ஈர்க்கிறேன்.

I. இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையின் வகுப்பு 3 இன் தரம் I இல் உள்ள உத்தியோகத்தர்கள் மாத்திரம் தகுதியுடையவர்களாக காணப்படுவார்கள்.

II. அதுதவிர இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 இன் தரம் I இற்கு தரமுயர்த்துவதற்கு அவசியப்படும் சகல தகுதிகளையும் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு சகல விதத்திலும் பூரணப்படுத்தியுள்ள, ஆனால் இதுவரை ஏதேனும் அல்லது தாமதம் காரணமாக குறித்த தரமுயர்வுக் கடிதத்தைப் பெறாத உத்தியோகத்தர்கள் மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்திருப்பின் அவ்வுத்தியோகத்தர்களும் அப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க தகுதியானவர்கள் எனக் கருத முடியும்.

03. எனினும் மேற்படி வகுதிகள் இரண்டிற்கும் உட்படாத இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தகுதி பெற்றிருராத இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் உத்தியோகத்தர்களைப் போன்றே பிற சேவைகளில் கடமையாற்றும் குறிப்பிடத்தக்க அளவு உத்தியோகத்தர்களும் இப்பரீட்சைக்கு விண்ணபித்துள்ளார்கள் எனவும், எதிர்ப்பார்க்கப்படும் அளவிற்கு மேற்பட்டவர்கள் இந்த பரீட்சைக்கு விண்ணபித்துள்ளார்கள் எனவும் அவதானிக்கப்பட்டுள்ளது.

04. இந்நிலைமையின் கீழ் இந்த பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு உண்மையாக தகுதியுடைய உத்தியோகத்தர்களை அடையாளம் காணும் வகையில் கூகள் படிவம் (Google Form) ஒன்று அறிமுகப்படுத்தப்படும் என்பதனை கவனத்திற் கொள்ளவும். அதன்படி மேற்படி 02. I மற்றும் II ஆம் பந்திகளின் படி இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியுடைய உத்தியோகத்தர்கள் மாத்திரம் கீழ்வரும் இணைப்பின் மூலம் கூகள் படிவத்தினுள் பிரவேசித்து அதனை நிரப்பி அனுப்புவதன் ( Submit) மூலம் அவர்கள் இந்தப் பரீட்சையில் தோற்றுவதற்கு நிச்சியமாக தகுதியுடைய உத்தியோகத்தர்கள் என்பதனை உறுதிப்படுத்த வேண்டும். அவ்வுத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான வாய்ப்பினை வழங்குமாறு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்க என்னால் நடவடிக்கை எடுக்கப்படும்.

https://bit.ly/3BVdBky

**படிவத்தை நிரப்புவதற்கு 2023.05.29 ஆந் திகதி முதல் 2023.05.31 ஆந் திகதி நள்ளிரவு 12 மணி வரையான கால அவகாசம் மாத்திரமே வழங்கப்படும்.**

05. பரீட்சைக்கு விண்ணப்பிக்க தகுதியில்லாத எவரேனும் உத்தியோகத்தர் இப்பரீட்சைக்கு விண்ணப்பித்திருப்பதாயின், அது தொடர்பில் நியமன அதிகாரியான என்னால் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஏற்ப அந்த உத்தியோகத்தர்கள் செயற்பட வேண்டும் எனவும் மேலும் அறியத்தருகிறேன்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்